## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 32/2023

நாள் 09.03.2026

PW 1 – ஜெகதீஸ்வரன்

த/பெ – ரவிச்சந்திரன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**குறுக்கு விசாரணை**

நான் ஆலத்தூர் கனரா வங்கி கிளையில் கடந்த 10.06.2024ம் தேதி முதல் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். பிரதிவாதி எங்கள் வங்கியில் கடந்த 06.09.2014ம் தேதியில் கடன் பெற்றுள்ளார். அது வியாபாரக்கடனாக பெற்றுள்ளார். இந்த வழக்கில் கண்ட கடனானது மத்திய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களில் உள்ள கையொப்பங்கள் ஒரே நாளில் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் உள்ள பிரதிவாதியின் மூன்று கையொப்பங்களும் ஒரே கலரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களில் பிரதிவாதியிடம் அவர் கடன் வாங்கிய 2014ம் ஆண்டிலேயே எங்கள் வங்கியால் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களில் உள்ள கையொப்பங்களை ஆய்விற்கு அனுப்பி அறிக்கை பெறுவதில் எனக்கு எந்தவித ஆட்சேபங்களும் இல்லை.

2. மேற்படி வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களில் உள்ள கையொப்பங்களை நான் பிரதிவாதியிடம் வாங்கவில்லை என்றால் அப்போது கிளை மேலாளராக இருந்தவர்தான்

கையொப்பம் பெற்றிருப்பார். அதில் உள்ள சாட்சிகள் யார், யார் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். அந்த உயிர்ப்பிப்பு கடிதங்களை பூர்த்தி செய்தவர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். வா.சா.ஆ.6, மற்றும் வா.சா.ஆ.7 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களை ஒரே நபர்தான் பூர்த்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சம்மதம் இல்லாமல்தான் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களை தயார் செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.6 கடிதத்தில் கடன் குறித்த விவரத்தை தெரிந்து ஏற்றுக்கொண்டார் என்று பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார் என்ற இடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்களது வழக்குரையில் பிரதிவாதி வாங்கிய கடன் தொகையில் எவ்வளவு கடன் தொகையை திருப்பி செலுத்தியுள்ளார் என்றும், எவ்வளவு கடன் தொகை நிலுவையில் உள்ளது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களில் உள்ள தேதியில் பிரதிவாதி எங்கள் வங்கிக்கு வந்து கடன் குறித்த விவரத்தை ஒப்புக்கொண்டு கையொப்பங்கள் எதுவும் போடவில்லை என்றும், அதற்கு மாறாக பிரதிவாதி எங்கள் வங்கியில் கடன் பெற்ற தேதியிலேயே பூர்த்தி செய்யப்படாத தேதியிலேயே பல கையொப்பங்களை பெற்றுக்கொண்டு அதை பின்னிட்டு இந்த வழக்கிற்காக வேண்டி பூர்த்தி செய்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் கண்டுள்ள தாவா கடன் தொகையானது காலாவதி ஆகிவிட்டது என்றும், அதனால்

இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:40:22 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**